தற்போது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இவற்றைக் கட்டித் தர அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பாலம் கேட்டு, 3 பாலங்களைக் கோரிக்கைகளாகக் கொடுத்து இருக்கின்றார்கள். வரும் நிதியாண்டில் அந்த 3 பாலங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

42—

சிமெண்ட் தளம்

***13141—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்திலுள்ள கீழ்பவானி பாசன திட்ட வாய்க்காலில் சிமெண்ட் தளம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2003 மார்ச் 24]

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்பவானி பாசன திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 3 இலட்சம் ஏக்கர் அளவில், ஈரோடு மாவட்டத்தில் மட்டும் அல்ல, கரூர் மாவட்டத்திலும்கூட பயன்பட்டு வருகிறது. இப்பெரிய திட்டத்தினால் அணையில் இருந்து திறக்கப்படுகின்ற தண்ணீர், முறையாக கடைமடை பகுதிகளுக்கெல்லாம் சென்று அறிவிக்கப்பட்ட நாட்களில் இருந்து பயிர் செய்யப்பட்டு பயிர் அறுவடை செய்யும் காலம் வரை அந்தத் தண்ணீர் வினியோகிக்கப்படுகின்ற நேரத்தில் முறையாக பாசனத்திற்கு சென்று அடைவதில்லை. மிக முக்கிய காரணம் அதற்குரிய அந்தக் கால்வாய், இடையிலே உடைப்பு ஏற்பட்டு இதனால் தண்ணீர் வீணாகி விடுகின்றது. செய்யப்பட்ட பயிர்களையும் உரிய முறையில் விவசாயிகளால் அறுவடை செய்ய முடியவில்லை. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஒப்புதலின் பேரில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டதாக அறிந்து இருக்கின்றேன். எனவே விரைவில் இந்த அரசு அதற்குரிய துரித நடவடிக்கை எடுத்து அங்கு இருக்கின்ற விவசாயிகளினுடைய நீண்ட நாள் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில் உடனடியாக கான்கிரீட் தளம் அமைப்பதற்கு அரசு மறுபரிசிலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தில் உள்ள கீழ்பவானி பாசன வாய்க்கால், காளிங்கராயன் வாய்க்கால், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால் முதலியவற்றைச் சீரமைக்கவும், பாசன மேம்பாடு குறித்தும் ஓர் உயர்மட்ட குழு அரசால் அமைக்கப்பட்டது. அக்குழு இவ்வாய்க்கால்களை நிரந்தரமாகச் சீரமைத்துச் செப்பனிட ரூ.400 கோடி தேவை என அறிக்கையைச் சமர்ப்பித்தது. போதிய நிதி இன்மையால் இத்திட்டம் எடுத்துக்கொள்ளப் பெறவில்லை. தற்போது கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு மாநிலங்களுக்கு இடையே காவிரி சம்பந்தமாக வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதியுதவி செய்ய முன்வரவில்லை. எனவே, மேற்படி வழக்கு முடிவுக்கு வரப்பெற்றவுடன் கீழ்பவானி வாய்க்காலுக்கு சிமென்ட் தளம் அமைக்கும் திட்டத்திற்கு உலக வங்கி, நபார்டு அல்லது ஹட்கோ வங்கியின் நிதியுதவி கிடைக்கப்பெற்றால், இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 43, திரு. எஸ். ஆஸ்டின், மாண்புமிகு நிதி அமைச்சர்.

43—

தனித் தொகுதிகள்

•4728—திரு. எஸ். ஆஸ்டின்:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள தனித் தொகுதிகளை மாற்றியமைக்க தேர்தல் கமிஷனை அரசு கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை. தற்பொழுது மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள எல்லை மறுவரையறை கணக்கெடுப்பின்படி இப்பொருள் குறித்து முடிவு எடுக்கும்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மொத்தம் 45 சட்டமன்றத் தொகுதிகளும், 6 பாராளுமன்றத் தொகுதிகளும் தனித் தொகுதிகளாக இருந்து வருகின்றன. 1967-க்குப் பிறகு இந்தத் தொகுதிகள் மாற்றியமைக்கப்படாமல் கிட்டத்தட்ட 35 ஆண்டுகாலமாகத் தொடர்ந்து தனித் தொகுதிகளாகவே இருந்து வருகின்றன. எனவே, இந்த 45 சட்டமன்ற தொகுதிகள் மற்றும் இந்த 6 பாராளுமன்ற தொகுதிகளிலே தாழ்த்தப்பட்டோர் அல்லாத பொதுமக்கள் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்காமல் போகின்றது. அதைப்போல இந்தத் தொகுதிகளைத் தவிர்த்த பொதுத் தொகுதிகளிலேகூட தாழ்த்தப்பட்டவர்கள் போட்டியிடுவதற்கான வாய்ப்பு சரிவர கிட்டுவதில்லை. இருந்தாலுங்கூட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள், பொதுத் தொகுதியில்கூட தாழ்த்தப்பட்ட நபரை வேட்பாளராக போட்டியிடச் செய்து வெற்றிபெறச் செய்து இருக்கின்றார் என்பது (மேசையைத் தட்டும் ஒலி)